**அசல்வழக்கு எண். OS. 411 /2021- DW1 .**
**திருமதி .வெங்கடலட்சுமி த/பெ.வெங்கட்ராமையா**

**நாள்:29.11.2024.**
**குறுக்கு விசாரணை:**

சத்தியமாகச் சொல்கிறேன்.

நான் தாக்கல் செய்துள்ள பிராமணபத்திரிக்கையில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும்.

வாதிகள் எந்த பரிகாரத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியும்.

எங்கள் பெயரில் உள்ள சொத்து அவருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள்.

எனது அப்பா பெயரும் மற்றும் பெரியப்பா பெயரும் வெங்கடராமையா என்று ஒரே பெயர்தான்.

எனது அப்பாவை சின்ன வெங்கட்ராமையா என்றும் எனது பெரியப்பா வை பெரிய வெங்கட்ராமையா என்றும் அழைப்பார்கள்.

இந்த சொத்தை பெரிய முத்துராமையா சாமி என்பவரிடம் இருந்து வாங்கினாரா என்றால் எனக்கு தெரியாது.

நான் கூறுகிறேன் எனது பெரியப்பா பெரிய வெங்கடராமையா 1977 ம் ஆண்டு இந்த தாவா செத்தை வாங்கிய ஆவணம் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது.

இந்த சொத்து பூர்விகமாக முத்துராயசாமி பட்டா மூலம் பாத்தியப்பட்ட சொத்து என்றால் அது பற்றி என்கு தெரியாது. அதன் அடிப்படையில் தான் பொரிய வெங்கட்ராமையா கிரயம் பெற்றார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

பட்டா மற்றும் ஆவணங்கள் பெரிய வெங்கடராமையா பெயரில் தான் உள்ளது.

நான் சொல்லுகிறேன் இந்த தாவா பெரிய வெங்கட்ராமையா வாங்கும் போது உங்களுக்கு 5 வருடம் தான் இருக்கும் அதனால் இந்த சொத்துவழக்கின் விவரங்கள் நேரடியாக தெரியாது என்று சொன்னால் சரியல்ல.

இந்த சொத்து எங்கள் சொத்து என்பதை நிருபிப்பதற்கு மூல பத்திரம் நான் தாக்கல் செய்யவில்லை ஆனால் பெரிய வெங்கட்ராமையா எனது அப்பாவிற்கு எழுதி கொடுத்த உயில் மட்டும் தாக்கல் செய்துள்ளேன்.

நான் உண்மையில் வில் மூலம் இந்த தசாவா சொத்தை எனக்கு பாத்தியப்பட்டிருந்தால் 2008 ல் எனது வாரிசுதாரருக்கு தான செட்டில் மண்ட் மூலம் தாவா சொத்தை வழங்கிய ஆவணத்தை இது உயில் மூாலமாக பாத்தியப்பட்டது என்று சொலியிருப்பேன்.

நான் கூறுகிறேன் தாவா சொத்தில் ஒரு ஆவணம் ஏறபட வேண்டும் என்று தான் 2008 ல் ஒரு ஆவண சொத்தை உண்மையான உரிமையாளரிடம் இருந்து பரிக்கப்ட்டது என்று சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.**

ஓம்./-திரு.ஆர்.ஹரிஹரன்.,எம்.எல்.,
சார்பு நீதிபதி,
தேன்கனிக்கோட்டை.